டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
சென்னை-600090.

# அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I. | 1901 ௵ ஜூன் ௴ 10-உ. திருவனந்தபுரம். | இலக்கம்—5.

## விஷயங்கள்.

கவிப்பாடல் :—தி. பா. சிவ ராம பிள்ளை.
நமது பத்திரிகை :—பத்திராதிபர்.
கல்வியொழுக்கம் :—
சித்திரை ஆராய்ச்சி :— } இலக்குமணப் போற்றிகள்.
வரியம் :—A. K. கிருஷ்ணையங்கார்.
சத்தியவதி :—T. இலக்குமணப் பிள்ளை B.A.
சைவசித்தாந்தசாரம் :—S. பால்வண்ண முதலியார்.
செல்வியாளி :—A. K. கிருஷ்ணையங்கார்.
சமாசாரக் குறிப்புகள்.

பத்திராதிபர்:
ஸ்ரீ வள்ளல். சோ. சிவஞானதேசிகர்.

நாகர்கோவில் விக்டோரியா பிரஸில் பதிப்பித்து
திருவனந்தபுரத்தில், வெளிப்படுத்தப்பெற்றது.

1901.

[வருஷ சந்தா ரூ. 2.] [சஞ்சிகை அணா 4.]

# நமது பத்திரிகா போஷகர்கள். (PATRONS.)

---

ஸ்ரீமான் தி. வேதாத்ரீச தாச முதலியார் அவர்கள்,
ஐக்கோர்ட்டு பென்ஷன் ஜட்ஜ், திருவனந்தபுரம்.

,, T. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள்,
Conservator of Forests, கொல்லம்.

,, P. தாணுப் பிள்ளை அவர்கள், M. A., F. M. U.,
Chief Secretary, Travancore Government, திருவனந்தபுரம்.

,, S. கணபதிப் பிள்ளை அவர்கள்,
உண்டியல் வியாபாரம், திருவனந்தபுரம்.

,, P. C. வள்ளிநாயகம் பிள்ளை அவர்கள்,
High Court Registrar, திருவனந்தபுரம்.

,, மு. முத்துராமலிங்கம் பிள்ளை அவர்கள், B. A.,
மகாராஜா சர்வகலாசாலை தமிழ்ப் பண்டிதர், திருவனந்தபுரம்.

,, M. R. கிருஷ்ண ராவ் அவர்கள்,
Registration Director, திருவனந்தபுரம்.

,, K. S. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள்,
உண்டியல் வியாபாரம், திருவனந்தபுரம்.

,, S. திரவியம் பிள்ளை அவர்கள்,
Unjel Superintendent, திருவனந்தபுரம்.

,, S. சாமி அய்யங்கார் அவர்கள், திருவனந்தபுரம்.

,, ஐயப்பன் பிள்ளை அவர்கள், B. A.,
Educational Secretary, திருவனந்தபுரம்.

,, பரமேசுவரன் பிள்ளை அவர்கள்,
பென்ஷன் தாசில்தார், திருவனந்தபுரம்.

,, இராகவாசாரியார் அவர்கள், B. A.,
தாசில்தார், அகஸ்தீசுவரம் தாலுக்.

,, E. சுப்பராய முதலியார் அவர்கள்,
வக்கீல், ஸ்ரீவைகுண்டம்.

(இதன் தொடர்ச்சியை அட்டையின் 4-ம் பக்கம் பார்க்க.)

# மாட்சிமை தங்கிய
# இளவரசரவர்களின் தேகவியோகம்.

---

தாயினும் இனிய அன்புசான்ற ராம வர்மா இளவரசர் அவர்கள் ஜூன் மீ 6-உயாகிய வியாழக்கிழமை இரவில் திடீரென நம்மையெல்லாம் நீத்து வான்புக்க செய்தி நம் முளத்தை மிக பதை பதைக்க வாட்டுகின்றது. உடலை நடுநடுங்கச் செய்கின்றது. கண்ணீர்க் கலனைக் கவிழ்க்கின்றது. இந்நாட்டார் அனைவரும் ஆன்பிரிந்த கன்றென கண்ணீரும் கம்பலையுமாய் பரிதபிக்கின்றரே! இவ்வரச வமிசத்திற்கு இஃது மாற்றுதற்கரிய ஒரு பெரு நஷ்டமே! இப்பிரிவாற்றாமையால் நமக்குள்ள அனுதாபத்தை ஈண்டைக்கேற்ப சுருங்கத் தெரிந்துக் கொள்கின்றாம்.—பத்திராதிபர்.

# அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்—I. | 1901 ஸ்ரீ ஜூன் மீ 10-உ. திருவனந்தபுரம். | இலக்கம்—5.

## தனிப்பாடல்.

தாஅன் விளங்கித், தானே அனைத்தையும்
விளக்குவ ததுவே விளக்கமென் பதுவே
அதுவே,
புறப்பொருட் புணர்ந்து பொறிபுணர் விளக்கமு
மகப்பொருள் புறப்பொரு ளனைத்தொளிர் விளக்கமு
மெனவிரு கூறு மியன்றிருப் பதுவே
அவற்றுள்
முன்னது பின்னதன் பொருட்டே முளைத்துப்
பன்னருஞ் சிறப்பிற் பலவா யிருப்பினும்
பின்ன தின்றிப் பிறங்குவ தின்றே
பிறங்கினு
மன்ன தாதலை அதுவிளங் கின்றே
அதாஅன்று,
பகல்செய் விளக்க மிரவிற் பயவா
திரவிற் சிறந்தன விரண்டே யவற்றுட்
டிங்களென் பதுவே வளர்ந்துதே யும்மே
உண்மை திரித்து முணர்த்துவ துண்டே
இனியவ்
அகன்முதற் பெய்த நறுநெய் முதல்சுவைத்
திகிலிரு டின்பலென் றேன்றுகொண் டழன்ற
பரூஉச்சுட ரவைகெடப் பாறுவ துண்டே
இவ்விவை யின்ன வாகலின் இயம்பிய
வியல்பு பொதுக்கடிந் தியன்ற
தறிவு விளக்கமென் றறிதியென் னெஞ்சே.

# நமது பத்திரிகை.

அறிஞர்காள்,

பத்திரிகை மக்களுயிர்க்கு சுவதந்திர ஜீவனோபாயத்தைத் தருமாற்றலுடையது. இம்மட்டன்றி, தாயர், தந்தையர், நட்டார், அரசர், ஆசிரியர் ஆகிய இவர்கள் போன்று முறையே, அறிவு வளர்தற்கேதுவாகிய பல அரிய பெரிய வினிய செவிக் குண வளித்தலும், பற்பல மேலாக் கல்வி பயிற்றலும், 'நகுதல்' மட்டிலமையாது 'மிகைங் கண்மேற் சென்றிடித்து' உறுதியறைதலும், மறவழி நீக்கி, யறவழி நிறுத்தலும், உள்ளதை உள்ளவாறு அவ்வவர் தகுதிக்கேற்ப செவ்வனே விளக்குதலும், உடையவாய், எவ்வாற்றானும் மனிதர் எவர்க்கும் நன்மைபயக்கு மாற்றல் பெரிதும் படைத்த இப்பெற்றித்தாகிய பத்திரிகைகள், படிப்பவர் பொருட்டே பிரகடனஞ் செய்யப்படுகின்றன. பத்திரிகைகளை முறையே பெற்றுப் படித்துப் போற்றி யதன்வழி யொழுகு பவரே பத்திரிகாபிமானிகள் என்ற பெயர்க்கிலக்காவர். இத்தகையினர் நம் நாட்டில் வெகு அருமையினான்றே! இனி, பத்திரிகை பெற்று படித்த மட்டிலமைபவரும் பத்திரிகாபிமானிகளில் தலையாயர் எனப்படுவர். அதுவுமின்றி பத்திரிகையின் தலைப்பிலுள்ள விஷயப் பெயர்களை மாத்திரம் பார்த்து அங்கொன்றிங் கொன்றாய்த் திருப்பி வைப்பவரும் இடையாயரெனப்படுவர். இஃது மின்றி பத்திரிகையின் மேற்போதி கவசத்தைக் கூட நீக்காமல் வீசியெறிபவரையும் சிறிதும் வாய் கூசாது கடையாயரெனக் கூறலாம். எதுபற்றியெனின் தாம்வருந்தித் தேடிய பொருளைக் கொடுத்து பத்திரிகையை ஆதரிக்கின்றமையாலென்க. நிற்க.

சில கனவான்கள் பத்திரிகாசிரியரிடம் எமக்குப் பத்திரிகை அனுப்புங்க ளனுப்புங்களென அறிவித்தும் பதிவு புத்தகத்தில் தத்தம் கைச்சாத்திட்டும் நேரிலும் கடிதவழியாலும் அறிவித்து விடுகின்றார்கள். பத்திரிகாசிரியரும் இம்மேலோர் வாக்கை கௌரவ

வாக்காகமதித்து, நம்பி, கைட்பனமிட்டு மொத்தமாகக் காகிதமுதலியன சேகரித்துவைத்து முறையே பத்திரிகைகளை அச்சிடுவித்து அஞ்சல், தபால் முத்திரைகளும் ஒட்டி அனுப்பிவருகின்றார்கள். சில பத்திரிகைகளை முறையே பெற்று பின்னர், 'இனி எமக்கு தங்கள் பத்திரிகை வேண்டாமென்று' போலிக் காரணங்கள் கூறி நிருபம் விடுப்பர் சிலர். இவ்வாறு போலிக்காரணம் கூடத் தெரிவிக்காமல் பத்திரிகைகளைத் திருப்புவோருமுளர். இதனால் பரோபகாரம் கருதி உழைக்கும் பத்திரிகாசிரியர்கள் கைப்பொருளிழந்து தாம் மேற்கொண்ட அறச்செயல் நடாத்துதற்கு வலியின்றி கவலைக் கடற்குள் ஆழ்கின்றனர். மேற்கூறியவாறு இடையில் நிறுத்துவோர் அதுவரை தாம் பெற்றுக்கொண்ட பத்திரிகைகளுக்குள்ள விலையையாவது அனுப்பி மேல் மறுக்கின்றனரா? அதுவுமில்லை. இவ்வற நெறியாளரன்றோ பத்திரிகாபிவிர்த்திக்குக்கேடுவிளைத்தலிற்றலையாயரெனப்படுவர். இவ்வாறு செய்வதினும், முதன்முதலே பத்திரிகை வாங்கிப்படிக்கும் இயல்புதங்களுக்கில்லையென்பதை உள்ளவாறறிவித்து வெறுமனே நின்றுவிடுவார்களேயாகில், அது இவர்களுக்கு எவ்வளவு பெருமையும் விவேகமுமாம்!' இவரது செயல் எவ்வாறாயினுமாகுக. நமது பத்திராபிமானிகளின் வண்மை மாட்சியால் நமது பத்திரிகை நாளும் நாளும் பல்கியேவருகின்றது. இவ்வபிவிர்த்தியின் பொருட்டு சென்ற சித்திரைமாதம் 12 தேதி தொடக்கம் செந்தமிழ்ப் பாண்டி வளநாட்டில் 'சிந்து பூந் துறைகமழ் திருநெல்வேலி' முதலிய சில இடங்களுக்குச் சென்று முயற்சித்தோம். அங்கு திருநெல்வேலியில் கவிரகஜ நெல்லையப்ப பிள்ளை அவர்கள். A. V. திருமலையப்ப பிள்ளை அவர்கள் முதலிய சில கனவான்கள் நாம் கருதியவாறு பல உதவிகள் செய்து தந்தனர். இன்னும் செய்துதரற்கு மிசைந்தனர். தூத்துக்குடியில் வ: க. ஆ. வேயின்ற முத்துப் பிள்ளை அவர்கள். சு. க. சுப்பையாப் பிள்ளை அவர்கள், நமது சிஷ்யரத்தினமாகிய ஆற்றூர் சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஆகிய இவர்களா

ல் கிடைத்த உதவிகள் பல. பாளையங்கோட்டை சைவசித்தாந்த சபையாரது வண்மை மறக்கற்பாற்றன்று. இளவரசனேந்தல் மூதற்பாகம் ஜமீந்தாரவர்கள் நமது பத்திரிகா போஷகர்களுள் ஒருவராக நின்று இயன்ற உதவிகள் செய்ய விணங்கினர்.

தருவிதளம்ஜமீந்தாரவர்கள் :— இவர் கல்விச் செல்வமும்மிக்குடையவர். இம்மட்டோ! பரோபகார சீலத்திலும் மிகச்சிறந்தவர். இப்புண்ணியசிலர் நமது பத்திரிகையைப் போஷிப்பதற்கு இணங்கினதுமன்றி நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்தற்கும் உறுதிவழங்கினர். இவர்போன்று மற்றைய ஜமீந்தார்களும் பிரபுக்களும் மடாதிபதிகளும் பொதுநன்மைக்குழைக்க முன்வந்தால்நம் தமிழுலகம் எவ்வளவு மேலான நிலைமையை யடையும். ஐயகோ! இவர்களிற் பெரும் பாலார் கீழான பிராபஞ்சியர்கள் செல்லும் நெறியிற் பெரும் பான்மை செல்கின்றார்களே! பரிதாபம்! பரிதாபம்!

இதுவரை நம்பத்திரிகைக்கு 500. கையொப்பநேயர்க ளமைந்திருக்கின்றனர். நமது பத்திரிகா போஷகர்களின் பெயர் வரிசைகளையோ, பத்திரிகையிற் பிரசுரித்து வருகின்றோம். இனி கூடியவிரைவில் இதே சந்தாத்தொகைக்கு விஷயத்திற் கேற்ப உட்கடடு (Woodcuts) களோடு ஐந்துபாரம் வரை கூட்டப்படும். ஆனால் போஷகர்களும் கையொப்ப நேயர்களும் சிறிது கண்ணோட்டம் செய்தல் வேண்டும்.

☞ கையொப்பநேயர்காள், சென்றஇரண்டொரு இலக்கப்பத்திரிகைகள் குறித்தகாலத்திற்குச் சிறிது தாமதித்து வெளிப்பட்டன. அதற்குக் காரணம் அச்சுக்கூடத்தால் நேர்ந்தவைகளேயாம். இடையில் நாலாவது இலக்கம் பதிப்பிக்கப் பெற்ற திருநெல்வேலி நாநல் இஸ்லாம் பிரஸில் அச்சியற்றுதற்குரிய கருவிகள் பல நிறைந்திருக்கின்றன. சென்னைத்தத் தென்பாகத்திலுள்ள சிறந்த அச்சியந்திர சாலைகளுள் இது தலையிடம் பெறற்குரியது. அவ்வதிபரும் அத்தகையினரே. எனினும் பத்திரிகை வெளியிடுகின்ற இடம் அச்சிடுகின்ற இடத்திற்கு வெகுதூரமாயிருத்தல்பற்றி அதனை யொழித்து ஐந்தாவது இலக்கமுதல் அச்சிடுவதற்கு நாகர்கோயில் விக்டோரியா பிரஸில் (Victoria Press) வேண்டிய நிபந்தனைகளோடு உறுதிசெய்வித்துக் கொண்டோமாதலின், இனி குறித்தகாலத்தில் தவறுமல் பத்திரிகை அனுப்பிவரப்படும்.

125

# நல்லொழுக்கம்.

க-வது அதிகாரம்.

## நல்லொழுக்கத்தின் வியாபகசக்தி.

"மனிதன் தன் பிறவிக் குற்றங்களைத் தவிர்த்துத் தன்னை ஒழுங்குபடுத்திக் கொண்டாலன்றி எவ்வளவு இழிபொருளாவன்"—தானியேல்.

"ஒழுக்கமென்பது ஒவ்வொரு ஜீவாத்மாவின் இயற்கைக் குணம் பற்றி ஆய்ந்தறிந்த நன்னெறிப் பாக்கேயாம். ஒழுக்கமுடையோர் தாம் சார்ந்த ஜனசங்கத்தினுக்கு மனச்சான்று போல்வர்"—எமேர்ஸன்.

"ஓர் நாட்டின் ஆக்கத்திற்குச் சார்பானது மிகுந்த பகுதிப் பணமன்று; பலத்த கோட்டையன்று; அழகிய மாட மாளிகையுமன்று; ஆனால் கற்றுணர்ந்த நாட்டாண்மைக்காரர் தொகுதிக்கும், கல்வி, தெளிவு, ஒழுக்கமுள்ள குடிகளுக்கும் தக்கவாறும். இதிற்றான் அத்தேசத்தின் உண்மையான நயமும், முக்யமான பலமும், சுயம்பான சக்தியும் தங்கியிருக்கின்றன"—மார்டின் லூதர்.

நல்லொழுக்கமானது மனிதப் பேற்றினுக்குச் சிறந்த தூண்டு கருவியாகின்றது. அது தானமைந்த வியக்தி விசேடங்களால் மனித வியல்பை முடிந்த நிலைமையில் விளங்கக் காட்டுகின்றது ஏனெனில் அது மனிதனை அவனுக்குரிய சிறந்த நற்குணத்திற் புலப்படுத்துகின்றது.

ஒவ்வொரு ஜீவனத்திலும் முயற்சி, சத்யம், மேலான ஒழுங்கு, வஞ்சமற்ற யோக்கியமான மனக்கொள்கை யாகியவற்றையுடைய சுயம்பான உயர்குண மனிதரை ஜனங்கள் தாமே பூஜிக்கத் தலைப்படுகின்றனர். அன்னோரை விசுவசிப்பதும், அவர் பால் அந்தரங்கம் வைப்பதும் அவரைப்போல நடப்பதும் இயல்பாகின்றது. உலகத்தில் நன்மையெனப்படுவதனைத்தும் அவராலே நிலைபெறுகின்றது. அவர் இலரேல் இவ்வுலகம் நாம் வசிக்கும் தரமன்று.

மேதாவிகளுக்கு என்றும் புகழ்ச்சி கிடைப்பினும், ஒழுக்கமுடையோருக்கு பூஜிதை பெரும்பான்மையுமுரியதாகின்றது. மேதையானது பெரிதும் மூளை வலியாலும், ஒழுக்கமா

லாது மனப் பண்பாலும் உண்டாகின்றது. கடை முறையில், உலகின் கண் மேனிற்குந் திறத்தது மனப் பண்பேயாம். ஜனசமூகத்திற்கு மேதாவிகள் புத்திஸ்தானத்திலும், ஒழுக்கமுடையோர் மனச் சாக்ஷிஸ்தானத்திலு, நிற்கின்றனர். ஆனால் மேதாவிகளைச் சொல்லாற் புகழ்கின்றனர்; ஒழுக்கமுடையோரை நடையாற் பின் பற்றுகின்றனர்.

மனிதருள் பிரதாப சிலர், பெரும்பான்மையும், விசேடித்த சிலரே யாவர், பிரதாபத்திற்கும் வரையபட்ட பரிமாணமின்று. உள்ளவாறே அனேகருக்குத் தங்கள் வாழ்க்கையில் இடம் பொருள் ஏவல் மட்டுப்படுவதால் மிகச் சிலரே பிரதாபம் பெற இடம் வாய்க்கின்றது. ஆனால் ஒவ்வொருவனும் தனக்குரிய தொழிலைத் தன்னால் ஒல்லுமாறு உண்மையோடுங் கண்யதையோடும் நடத்தக்கூடும். தனக்குக் கிடைத்த பாக்கியத்தை நன்னெறியிற் செலுத்தியும், தீநெறியில் விலக்கியும் தன் வாழ்நாளை நலமாக்குவதில் முயலக்கூடும் சொற்பப் பொருளைக் கொண்டும் உண்மையு நீதியும் யோக்கியமும் விசுவாசமு முடையனாயிருத்தல் கூடும். சுருங்கச்சொல்லின், கடவுள் தன்னை அமைத்து வைத்த நிலைமையினின்றே, தன் கடமையைச் செலுத்தல் கூடும்.

இவ்வாறு ஒருவன் தன் கடமையைச் செலுத்துவது சாதாரணம் போற்றோற்றினும், அது உலகவாழ்க்கைக்கு வேண்டிய உயர் மனக்கொள்கையும் நல்லொழுக்கமும் வாய்ந்திருக்கின்றது. அதிற் சுத்த வீரனுக்குரிய குணம் ஒன்றுமிருக்கமாட்டாது. சுத்த வீரத் தன்மையானது மனிதருக்குப் பொதுப்பட ஏற்பட்ட பாக்கியமன்று. கடமையைப் பற்றிக்கொண்ட உணர்ச்சியானது, மனிதனை மிகச்சிறந்த பதவியில் நிலைபெறுத்தலுமன்றித் தினசரித ஜீவன சாதாரண கர்மங்களை நடத்துவதிலும் அவனுக்கு ஆதாரமாகின்றது. மனிதரின் வாழ்க்கையானது சாதாரண கடமைகளின் நடுவே தங்குகின்றது. பெரும்பாலும் நித்யகர்மத்திற்கு வேண்டிய ஒழுக்கங்கள் தான் எல்லாவற்றிலுமேலான சத்துள்ளன. அவை எல்லாவற்றிலும் நன்மையிற்சிறந்து நெடுங்காலம் நிலைபெறுகின்றன. சாதாரண புருஷரின் நிலைமைக்கு மிஞ்சிய புண்ணிய செயல்கள் மனக்கேட்டையும் அபாயத்தையும் விளைக்கலாகும். சுத்தவீரம் காரணமாக ஏற்பட்ட மனித ஒழுக்கமானது பலஹீன அல்லது துன்மார்க்க ரூபமாக முடிவது நிச்சயமென்று பர்க் என்பவர் உண்மையாக உரைத்திருக்கின்றனர்.

# விக்ரஹ ஆராதனை.

நண்பர்காள், இவ்விஷயத்தை அறிவிற் சிறந்த அனேகர் விளக்கியிருக்கின்றனர். அதில்யான் புகுந்து ஆராய்ந்துணர்த்தத் தகுதியிலேனெனினும், என் புத்தியிற்பட்டதை ஒருவாறு வெளியிட்டு விளக்கிக் கொள்ளாவிடில் அகம் பாவத்தால் அஞ்ஞான மேலிட்டு அறிவுகுன்றுமென அஞ்சி அவ்வஞ்ஞானத்தை யகற்றத் துணிந்தேனன். ஆதலால் இவ்வுபந்நியாசத்திற் காணக்கூடிய மாறுபட்ட கருத்துகளைக் களைந்து காட்டும் நல்வழியைக் கைப்பற்றுவதிற் கழிபெருங் காதல் கொண்டிருக்கிறேன். நிற்க.

நாம் எடுத்துக்கொண்ட விஷயம் விக்கிரஹ ஆராதனையைப் பற்றியது. அதனை, முதலாவது, விக்கிரஹ ஆராதனையின் பதப்பொருள்; இரண்டாவது, ஜீவர்களுக்கு அது இன்றியமையாமை; மூன்றாவது அது உலகத்திலுள்ள சர்வ மதத்தர்களுக்கும் சம்மதம்; நான்காவது, ஹிந்து மதஸ்தர் புரியும் வழிபாட்டின் தன்மை; என நான்காகப்படுத்து ஒருவாறு சுருங்க ஆராய்வாம்.

முதலாவது; விக்கிரஹம் என்பது "விசேஷமாகக் கிரஹிக்கிறது" என்னும் கருத்தையுடைய வடமொழிப்பதம். அது பிரகிருதத்தில் மனசைக்கவருகிற ஓர் வடிவத்திற்கு ஆகின்றது. சர்வவியாபகமான கடவுளைத்தியானித்தற்குக் குறியாக அமைந்த புனிதமான செம்பு சிலைமுதலியவற்றாலாய வடிவமென்னப்படும். அதனை சூக்கும காரண வடிவங்களிலும் பிரயோகிக்கலாம்.

இரண்டாவது; சர்வவியாபகமான கடவுளைத் தியானித்தற்கு விக்கிரஹம் இன்றியமையாமையைப்பற்றி ஆராய்வதின் முன்னர் மனசின் இலக்கணத்தைச் சிறிது விசாரிப்பாம். மனசுக்கு வடிவம் சங்கற்பமேயாம். அதாவது ஒன்றை நினைத்தலாம்; நினைப்பு நீங்கியவழி மனசின்வடிவமே ஒழிகின்றது. திருஷ்டாந்தமாக, புலியைக்காணாத மனிதன், புலி எப்படியிருக்குமென்று வினவில், அதனைக்கண்ட புருஷன் சாதாரணமாக இருவருங் கண்டவோர் பூனைமுதலிய பிராணிகளை மனசிற் சொரூபப்படுத்தி அதன் அங்கங்களைக்கொண்டு புலியை ஒருவாறு வகுத்துக்காட்டுகின்றனன். புலிக்கு ஏகதேசம் ஒத்ததாகிய வடிவத்தையாவது கண்டிருந்தாலன்றிப் புலியின் வடிவம் வாக்குமாத்திரத்தில் நிற்கும். அவன் புலியென்னும் பதத்தைக்கேட்குங்காலத்தில் பகர உகரம் லகர இகரம் என்கிற இந்த இரண்டு எழுத்து

கள்தான் அவனுக்கு முன் தோன்றிப்புலியின் போதத்தை யுண்டாக்கும். எழுத்தையும் உணராதவனுயிருப்பின் புலியென்ற ஒலியைக்கேட்ட மாத்திரத்தில், தான் கண்டதோர் வடிவம் ஏதேனும் ஒன்றில் அவன்புத்திபதியப்பெறும் அங்ஙனம் அழுந்தியிராவிடில் திரும்ப ஞாபகத்தில் ஒருக்காலும் புலியென்னும் போதமே யெழ இடமிராது. அன்றியும், மனசானது ஒன்றை நினைக்குங்கால் மற்றொன்றை மறக்கு மியல்பிற்று. இது பற்றியன்றோ நம்மவர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டி, ஞாபகக்குறியாகப் படங்கள், அடையாளங்கள், கருதிய பொருள்களின் அவயவங்கள், அவற்றைச் சேர்ந்த ஏதேனும் ஓர் அங்கமுதலியவற்றை மிகுதியும் பழகக்கூடிய தலங்களில் ஆதரித்துவைக்கின்றனர். ஆனால் மனசானது தானே நாடக்கூடிய இம்மைவிஷயங்களில் சுகமடையக்கருதி இவ்வளவு சிரத்தையெடுத்துக்கொள்வரெனின், நாம் கண்ணுற்கண்டிராததும் காட்டமுன்னின்றவர்களாலு முழுதுங் கண்டறியப்படாததுமாகிய இலக்கணத்தையுடைய பரம்பொருளை, இம்மைப்பற்றற எளிதில் விருப்புறாத மனசால் அறிய இச்சிப்பமெனில் எவ்வளவு பகீரதப்பிரயத்தினம் வேண்டுமென்பதை யூகித்தல்வேண்டும். இவ்வுலகப்பொருளையுணரச்சாதனமாய மனசே இவ்வுலகத்திற்கு அதீதமான பொருளையுமறியக் கருவியாகின்றது. அம்மனசால் ஓர்விஷயத்தையறியவேண்டின் பிரத்யக்ஷ பிரமாணமே மேலானது. இங்ஙனம் மனசின் இலக்கணத்தை ஒருவாறு விசாரிக்கின் மனசில் ஓர்வடிவத்தை உருவாக்குதற்கு விஷயமான சடிப்பு ஒன்று வேண்டற்பாலதென்றும், அச்சடிப்பு இலாவிடில் மனசிற்குக் கிரஹண சக்தியற்றுப்போகின்றதென்றும் ஆதலால் மனசானது நினைத்துப்பயன்பெறுவதற்கு இலட்சியமாகிய விக்ரஹம் ஒன்று இன்றியமையாமையென்றும் கோடல் தகுதியாம்.

மூன்றாவது, ஆஸ்திகராயினோர் எவரேனும் விக்கிரஹங்களை வைத்து வணங்குகின்றனராவெனின் உலகத்திலுள்ள ஆஸ்திகரனைவரும் அவ்வாறே ஒழுகுகின்றனர். ஆனால் விக்கிரஹத்தை ஆராதனை செய்யுமுறைகள் பலவகைப்படும்' தற்காலம் உலகத்தின்கண்ணுள்ள மதங்களனைத்தையுங் கண்டித்து மூலைமுடங்குகளிலும் விசேஷ பிரசங்கம் செய்துவருகிற கிறிஸ்தவமதத்தைக் கவனித்தால், கடவுள் மோசே என்பவருக்குப் பத்துக்கற்பனைகள் அளிப்பதன்முன்னர் விக்கிரஹ வணக்க மிருந்ததென்பதும்' ஓர்கற்பனையால் அதனை விலக்கியும் அம்மதத்தின் பூர்வகொள்கையைவிடாது அனுஷ்டி

த்துவரும் உரோமன்காதலிக் வகுப்பினர் இன்றும் அவ்வாராதனையை நடத்திவருகின்றனர். அன்றியும் கடவுள் கற்பனையைக் கடவாததுபோல் வெளிப்படையான விக்கிரஹவணக்கத்தை நீத்த லூதர் மதத்தினரும் அகக்கண்ணால் ஓர் வடிவை உருவப்படுத்தாமல் தியானித்தல் கூடுமா? கூடாதென்பதே துணிபு. எவ்வாறெனில், ஆஸ்திகராயினார் எவரும் ஓர் கடவுளை நம்புதல் வேண்டும்; அக்கடவுளுக்கு மூர்த்தி தலம் கற்பித்தல் வேண்டும்; அம்மூர்த்தியின் சொரூபத்தையும் அத்தலத்தின் மகிமையையும் உணர்தல்வேண்டும்; ஆகவே கடவுளுடைய சரீர இலக்கணம் குண இலக்கணம். அவர் உறையுந் தலஇலக்கணமாகிய மூன்றையும் ஒருவாறு மனசில் உருவப்படுத்தவேண்டுவது அவசியமாகின்றது. ஆனால் லூதர் மதஸ்தர் கடவுளின் சொரூபத்தைமனசில் தியானிக்கலாம்; ஹிந்துக்கள் முதலிய மதஸ்தரைப்போன்று விக்கிரஹத்தை ஸ்தூலரூபத்தில் வைத்து வணங்கலாகாதென்பர். அங்ஙனம் வணங்கினால்த் தோஷமின்றென யுக்தியால் விளக்கிக்காட்டப்புகில் எங்கள் கடவுள் கூடாதென்றனர் என்று கூறித் தாம் கொண்டதையே சாதிப்பர்.

நான்காவது. ஹிந்துக்களது விக்ரஹ வணக்கத்தின் இயல்பையும் கருத்தையும் விளக்குவதன் முன்னர் ஸ்தூலவிக்ரஹத்தைக்கொண்டு தெய்வ வணக்கம் செய்யலாமா? அதிற்பாவம் உண்டா! என்பதைப்பொதுப்பட ஆலோசிப்பாம். ஓர் தந்தையானவன் தன் சிசுவானது தன் வீட்டுவேலைக்காரர் எவரிடத்தேனும் பற்றுண்டு. தான் அழைத்தாலும் தன்னிடத்தில் வராமல் இருப்பக்கண்டு அதனைச் சிக்ஷிப்பானா! அவ்வேலைக்காரனையாவது தண்டிப்பானா! மாட்டான். அந்த வேலைக்காரனைக்கொண்டு குழந்தையை விசேஷமாகப் பேணும்படி எச்சரிப்பான். ஆனால் அக்குழந்தையானது அவ்வேலைக்காரனையே தன் தந்தையெனமாறுபடக்கொண்டு அவனைப்பற்றி நிற்பதாக அத்தந்தை அறியின் அக்குழந்தையின் அஞ்ஞானத்திற்காக பரிதபித்தலோடு அக்குழந்தையின்மீது அவனுக்குள்ள அன்பு அடங்காது ஓங்குமன்றே! அங்ஙனமே ஒருவன் தெய்வம் ஒன்று உண்டென நம்பி, அதற்குத் தன்னாலியன்ற உபசாரம் செய்யவிரும்பி, அதனை யேற்றுக்கொள்கின்றதென்கிற விசுவாசத்துடன், மண்ணால் நிமிர்த்த ஓர் வடிவினுக்கு வணக்கம் புரிவனேல், சர்வஞ்ஞத்துவமும், ஜீவகாருண்யமு முள்ள கடவுள் அவனுக்கு நற்பயன் அளியாரென்று கூறத்துணியார். நிற்க.

ஹிந்து மதஸ்தருடைய விக்கிரஹ ஆராதனையின் இயல்பும் கருத்தும் என்னவென்பதை விசாரிப்பாம். ஹிந்துமதமானது உலகத்தில் மதமென்று நாமங்கொண்ட எம்மதத்தினுடைய கொள்கையையும் தனக்குள் அடக்கியிருக்கின்றது. ஹிந்து மதத்திலில்லாத கொள்கை வேறு மதத்திற் காணலாமென்றால், கிறிஸ்து மதத்திலுள்ள நித்ய நரக, நித்யசொர்க்கமென்பதொன்றேயாம். ஆனால் அந்தக் கிறிஸ்தவ மதத்திலுள்ள மூலக்கொள்கையும் ஹிந்து மதத்தின் கொள்கையும் ஒரேதன்மையதாக விளங்குகின்றதென்பதை வேறோர் சமயம் சொல்வாம்.

ஹிந்து மதத்தில் விக்ர ஆராதனையானது இருவகையாகச் செய்யப்பட்டுள்ளது. ஒன்று பக்தி மார்க்கம்; மற்றொன்று வேதாகம நெறிபற்றியது. பக்திமார்க்கமானது முற்கூறிய ஸ்தூல விக்கிரஹவணக்கத்தில் அடங்கும். வேதாகம நெறிபற்றிய மார்க்கமாவது ஜீவாத்மாக்களுடைய தத்துவகுணங்களை உருவகப்படுத்தி, அக்குணங்களையே பரமாத்மாவின் ஆசனம் வாஹனம் பூஷணாதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றதென்பதைச் சிவாகமங்களின் வழியே காணலாம். திருஷ்டாந்தமாக இருதயகமலமே சுவாமிவீற்றிருக்கும் ஆசனமெனவும், அவ்வாசனத்திற்குப் பாதங்கள் தர்மம் ஞானம் வைராக்கியம் ஐசுவரிய மெனவும், அரவாபரணங்கள் குண்டலினி சக்தியெனவும் கூறப்பட்டுள்ளன. அவ்வாசனத்தில் கடவுளை ஆவாஹிப்பதன் முன்னர், விக்கிரஹத்திற்குப் பால் முதலியவற்றால் சுத்திசெய்யப்படுகிறது, அதனையே அபிஷேகமென்பர். சிவாகமத்தின் கருத்துப்படி பிம்பசுத்தியின் கிரியை முடிவுபெறும்வரை கடவுள் அதில் எழுந்தருளினதாகவில்லை. அப்பிம்ப சுத்திக்குப்பின்னர் "யாவத், பூஜாவஸாநகம், தாவத் அஸ்மின் லிங்கே ஸந்நிதிபவ" என்னுமந்திரத்தை உச்சரிக்கின்றனர். அதன் கருத்தாவது "பூஜைமுடியும்வரை இந்தலிங்கத்தில் எழுந்தருளுக" என்பதாம் அவ்வாறு எழுந்தருளியபின்னர்மனசினால் அபிஷேக தூபதீப நைவேத்தியங்கள் செய்யப்படுகின்றன. இக்கிரியைகளைக் கவனிக்கும்பொழுது, செம்பையும் கல்லையும் தெய்வமாக ஹிந்துக்கள் கொண்டாடி, அவற்றைத்தவிர வேறில்லையென்றுகருத்துக்கொண்டிருப்பதுபோலப் பிறர் கூறுவது அவதூறேயாம்.

அன்றியும் விக்ரஹ ஆராதனையை விதித்தமகான்களும் அம்மட்டில் நில்லாது ஆன்மாக்களுடைய அறிவின் பரிபக்குவ நிலையை, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற நான்குபிரிவினுட்படுத்தி, ஸ்தூல ரூபமான விக்ரஹங்களின் வழியே கடவுளைத் தியானித்தல் சரியை யென்றும்,

மாய்ப் பரிணமிக்கின்றது. இஃது காற்றின் நிலைமைக் குத்தகப்படி, சிறுகியும் பெருகியும் தோன்றும். உற்றுப்பார்த்தால், இவை உருண்ட வடிவினையுடைய, மிகச் சிறியவான பல பொருள்களைத், தம்மிடத்தில் உடைத்தாயிருத்தல், நன்கு புலப்படும். இப்பொருள்கள், எரிமலையிலிருந்து புறம் போந்தவைகளல்ல, நிலத்தின் உள்ளிடத்திலிருந்து, வெடித்து, மலையை ஊடுருவிக்கொண்டு, அதன் மேலிடத்தைப் பிளந்து சென்றிருக்கும் பொருள்களாம்.

இராக்காலத்தில் இம்மலையின் காட்சி மிகவும் வியப்புடையதாகும். நான்கு பக்கங்களிலும் நூறுமைல் தூரத்திற்கு இதன் காட்சி புலப்படும். கடல்வழிச் செல்வோர்க்கு, இம்மலையின் உச்சியில், இடைவிட் டிடை விட்டுச்சிவந்த மத்தாப்பின் ஒளிபோன்ற வெளிச்சம், தோன்றுவது வழக்கம். தோன்றும் ஒளி, படிப்படியாய் வளர்வதும், சிறிது நேரஞ் செல்லுகையில் அப்படியே படிப்படியாய்த் தேய்ந்து மாய்வதும், யாவரும் கண்ணுற் கண்டு களிக்கும் உண்மையான தோற்றமே. இக்காட்சி, பொழுது விடியுமட்டும் நிகழும். பகலில், சூரியனது மேலான வெளிச்சத்தால் காணாது மறைந்திருப்பினும், நிகழ்ச்சி நிற்காமல் நடைபெறுகின்றது. இக்காட்சியின் அருமை பற்றி ஸ்டராம் போலி மலையை மத்தியதரைக் கடலின் தீபஸ்தம்பம் (The light house of the Mediterranean) என்று கப்பல் யாத்திரைக்காரர் பெயரிட்டிருக்கின்றனர். இதன் ஒளி, நெடுநேரம் நிற்கும் மின்னல் வெளிச்சத் தோடொத்திருக்கும்.

இது, தூரக்காட்சிக்குப் புலப்படும் தோற்றம். கிட்டப்போய்ப் பார்த்தவர் கண்ட காட்சியைச் சிறிது விளக்குவன். இம்மலை, எப்பொழுது மெரிந்து கொண்டேயிருந்தும் ஒருபொழுதும் கரியாய்ப் போகவில்லை. இம்மலைக்கிருப்பிடமாகிய தீவு, எரிமலைகள் கக்கும் பொருட்டொகுதியால் ஆக்கப்பட்டிருக்கின்ற தென்பது, அதன் கரையை யடுப்பவர்க்கு நன்கு விளங்கும். கொல்லன் உலையிட்டிருக்கும் கூடத்தின் தரை மீது, பரந்து கிடக்கும், பொருளோடு, உவமிக்கக்கூடிய பொருள்களால், இத்தீவுண்டாக்கப்பட்டிருக்கின்றது. இத்தீவின் கரை எங்குமொன்று போலிருக்கவில்லை. இதற்குக்காரணம், காற்றும், மழையும், திரையும், எப்பொழுதும், இளகிக்கிடக்கும் பொருள்களை, அங்கு மிங்கு மலைத்தும் கரைத்தும், அக்கியெறிந்தும், இடம் பெயர்த்திடுகின்றதுந் தாம் கனமுடைய பொருள்களை அசைக்க அவற்றிற்குத் திறனில்லாமையால் அவை அவ்வவ்விடங்களிலேயே நிலைத்துக் கிடக்கும்.

கடலின் நீர்மட்டத்திற்குமேல் 3090 அடியுயரமுடையதென முன்யான் கூறியமலை, இப்பொருள் குவிர் தயாந்ததே. என்க. இம்மட்டோடு நிற்கவில்லை. தரைமட்டத்திற்குக் கீழிலும், கடலிற்குள் 4 மையில் பரப்பில், 3000 அடி கனத்தில் இப்பொருள் குவிந்து கிடக்கிறதாகக கடல்நிலை காண்போர் கூறியிருக்கிறார்கள். என்றால் இவ்வெரிஎறியின் ஆற்றலை என்னென்று கூறவேண்டும்.!

இம்மலையின் வடமேற் சரிவில், உச்சியில் இருந்து 1000 அடிக்குக் கீழாகவும், கடல்மட்டத்திலிருந்து 2000 அடிக்குமேலாகவும், கிடக்கும் ஓரிடத்தில், வட்டமான ஒரு குழிவுண்டு. இதுதான் அம்மலையின் தற்போதையக் கக்குவாய் (Crater) அடியிலிருந்து மேலேறிச் செல்ல இடந்தரும் சரிவொன்றும், இம்மலையிலிருக்கின்றது. அதன் வழியாய் எறி மேர்போனால், இவ்வெறிவாயின் பக்கவிடத்திலிருந்துகொண்டே, அங்கு நிகழும் காட்சிகளை ஒருவாறு காணலாம். அப்படிச்சென்றுபார்த்தவர்களுள் ஒருவர் மொழிந்திருப்பதைக் கூறுவேன். "1874-ம் வருஷம் ஏப்ரில் மீ 24-உ, நான் இந்த மனோகரமான இடத்திற்குச் சென்று, அங்கு நடக்கும் அதிசயத்தை நேரிற் பார்த்தேன். அம்மலைச்சாரில் ஓர் தங்கிடமுளது. அதிலிருந்து பார்த்தால், கக்குவாயிலிருந்து புறப்படும் பொருள்கள், நன்றாய்த் தெரியும். அப்பொழுது அங்கு நான் கண்டவற்றைப் படம்பிடித்தேன். ஆரம்பத்தில், இலேசான பல புகைச் சுருள்கள், ஒன்றன்பின்னொன்றாய்ச், சிறிதுநேரம் அக்கக்குவாயிலிருந்து புறப்பட்டு, மேலெழும்பிக்கொண்டிருந்தன. அதன் பக்கங்களிலிருக்கும் வெடிப்பு வாய்களின் வழியாயும், இவவாவித்திரகள் புறப்பட்டெழும்புவதைப் பார்த்தேன். நினைப்பின்றியிருக்கையில், திடீரென்று ஒரு சத்தமுண்டாயிற்று. புகைவண்டி செல்லும் வழிச்சாலையில் வண்டி புறப்படும்பொழுது ஆவியந்திரத்திலிருந்துண்டாகும் சத்தத்தோடு அவ்வரவம் ஒத்திருந்தது. அதிவேகத்துடன் அச்சத்தத்தைப்பின்விட்டு, ஏராளமான நீராவித்திரளும், அதனோடுகலப்புண்டு அளவிற்கடங்காத பல கரிப்பொடிகளும், 500 அடியுயர்ந்து எழும்பிக், கீழ்நோக்கி இறங்கி, மலையின் பக்கங்களிற் சிதறிவீழ்ந், தெங்கும் பரந்தன. இவற்றுள்பல, கக்குவாயிற்குள் பேரரவத்தோடு விழுந்தன. சில, செங்குத்தான பக்கங்களின் வழியாய் உருண்டுருண்டு கீழ்நோக்கிச்சென்று கடலிற்குள் மறைந்தன. இவை பாதி உருகியும் பாதியுருகாது திசிறம்பெற்று மிருந்தமையால், ஏதேனுய நாயத்தை அப்பொழுகிவற்றிற் போட்டால், அந்நா

ணயத்தின் உருவம் இதிற்பதிவுறுமென்பதற்குச் சந்தேகமில்லை.

இதுமட்டும் நானிருந்தது, க்க்குவாயின் கீழிடத்தில். அதன் மேலிடத்தும் ஓர் தங்கிடமிருப்பதைக் கண்டு, அங்குச் சென்றேன். அங்கிருந்து பார்க்க, க்கக்குவாயின் உள்ளிடத்துண்டான காட்சி, எனக்குத் தெளிவாய்ப் புலப்பட்டது. அதனடியிற் பற்பல வெடிப்புகளிருக்கின்றன. இவற்றின் வழியாய், மெல்ல மெல்ல, நீராவித்திரள், அவ்வாயினுள்ளிடத்தில் வந்து, சிறிது நிமிஷம் தங்கியிருந்து, வேறு திரள்கள் அடியிலிருந்து வந்து இத்திரளை அங்கிருக்க வொட்டாமல் துரத்த, அஃது க்க்குவாய் வழியாயும், பக்கவிடங்களிலிருக்கும் வெடிப்புகள் வழியாயும், வெளிக்கொள்வதைப் பார்த்தேன். இச்சிறு வேடிப்புக்களன்றி, பல பெரும் பிளப்புக்களும் கக்குவாயின் அடியிலிருக்கின்றன. இவற்றின் தொகையும் அளவும் ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு விதமாயிருந்தன. சில சமயம் ஒரே பிளப்புத்தான் புலப்பட்டது, சில சமயம் ஆறும் ஏழும் பிளப்புக்களிருப்பதைக் கண்டுளேன். இப்பிளப்பு வாய்களிற்றோன்றும் காட்சியை உற்றறிவது, மிகவும் வேண்டற்பாலது. மூன்றுவகையான பிளப்புக்களிருக்கக் கண்டேன். அவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தனி பிரத்தியேகமான தொழில்களைச் செய்கின்றதைக் ஒன்றன்வழியாய், நீராவி, பெருமுழக்கத்துடன் திரள் திரளாய் வருகின்றது. இரண்டாவது வகுப்புப் பிளப்புவாய் வழியாய் கட்டிப் பொருள் உருகி வெளிப்படுகின்றது. ஊற்றுவாயிலிருந்து நீர் கொப்பளித்து வருவதுபோல், இத்திரவப் பொருள் எழும்புகின்றது. இவற்றிலிருந்து, நீராவி வேறு பிரிந்தெழும்புவதையும் காணலாம். மூன்றுவது வகுப்புப் பிளப்பில், உலையிலிட்ட அரிசி கீழும் மேலும் பொங்கித்தளைப்பதுபோல், உருகிய பொருள்களுக்கிடையிடையே, உருகாதிருக்கும் துண்டுப் பொருள்கள் அகப்பட்டுக்கொண்டு, கீழும் மேலுமாய்க் கூத்தாடும். கடைசியில் இவையனைத்து மொன்றாய்த் திரண்டு குபீரென்று வெடித்து மேலெழும்பி, ஆவியாகவும் நீர்த்திவலைகளாகவும் கரியணுப்பொடிகளாகவும் வெளியிடங்களிற் சிதறி விழும் இக்காட்சி மிக்கவியப்பைத்தரா நிற்கும்.

இராக்காலத்திலிக் காட்சி இதினும் சிறந்ததாயிருக்கும் பகற் காட்சியால் நமக்குக் கிடைக்கும் அறிவினும் மேலான சில அறிவு இராக்காட்சியால் கிடைக்கும். சிறுவெடிப்புக்களும், பெரும் பிளப்புக்களும், செந்தீ நிறம் பெற்ற இருப்புக் கம்பிபோல், பளபளவென்று பழுத்திருப்பதைக் காணலாம். திரவப் பொருள்கள், வெளுத்

திருக்கும் தீச்சுடரின் தன்மைபெற்றிருக்கும். அவற்றின் இடையிடையே பதிந்து கிடக்கும் கட்டிகள், 'தீயன்' என்று நாம் பெயரிட்டழைக்கும் கல்லின் நிறம் காட்டும். மேற்பாகத்துள்ளவை, வெடித்து மேலெழும்பினவுடன், கீழிருந்து, புதிதாய் வேறுபொருள்கள், அவ்விடத்தைப் பற்றிக் கொள்ளும். என்றார்.

இவற்றிலிருந்து நாம் எரிமலையின் தன்மையைப்பற்றி என்ன அறிகிறோம் என்றால்,

(1) பூகோளத்தின் உள்ளிடத்திற்கும் வெளியிடத்துக்கும் போக்குவரவு செய்விக்கும்படியான சில வெடிப்புக்களும் பிளப்புக்களும் தரைமீதிருக்கின்றன.

(2) பூமியின், தரைக்குக் கீழிருக்குமிடத்தில், மிகச் சூடுடைய சடப்பொருள் இருக்கின்றது;

(3) பெருங்கணக்கான நீர்த்தொகுதி, வெளிப்படவொட்டாமல் பாதாளத்தில் அடைத்துவைக்கப் பட்டிருக்கின்றது. இது ஆவியாய்ப் பரிணத்துமித்துப் புறஞ்செல்ல எத்தனிப்பதால், மேற்கூறிய காட்சிகள் நிகழ்கின்றன. என்பவே என்க.

ஸ்டராம்போலி மலை, சாதாரணமாய் அமைதியாய்ப் புடைபெயருமியற்கை உடையதாயிருப்பினும், அதனுள்ளிடத்திலிருந்து சிற்சிலவேளைகளில பேருக்கம் வெளிப்படுவதைப் பார்க்கலாம். ஒரோவேளைகளில் அதிலிருந்து உண்டாகும் சத்தம், வெகுதூரத்திலிருப்பவர் காதிற்போய்த் தாக்குவதுண்டு. அதிலிருந்து பொங்கி மலைவழியாய் வழிந்துவிழும் உருகுபாறை (Lava) ஒழுகிக் கடலிற் போய்கலக்கும். முப்பது மைல்தூரம் ஒழுகும் மழுவாறுகளுமுண்டு.

விசூவியஸ் முதலான மலைகள், சிலவேலைகளிற்றான் வெடிக்கின்றன. அவ்வேளைகளில், அவற்றினிடந் தோன்றும் காட்சிகள், மிகுந்த அச்சந்தரும்படியானதாயிருக்கும் எனினும், ஸ்டராம்போலி மலையில் வழக்கமாய் உண்டாகும் தோற்றத்தோடொத்த காட்சிகளும், அவற்றினிடம் உண்டாவதைக் காணலாம். உதாரணமாக, 2872-ம் வருஷத்தில் விசூவியஸ் மலையிலுண்டான எரி எறி நிகழ்ச்சிக்குச் சிறிது நாள்களுக்குமுன், அதன் சக்குவாயின் விளிம்பையொட்டி, புதிதாயோர் அம்பாரந் தொன்றிற்று. அதன்வழியாய், ஸ்டராம்போலியில் வழக்கமாய் உண்டாகும் புடைபெயர்ச்சியோடு முற்றிலும் ஒத்த எரி எறி, தொடர்ச்சியாய்ச் சிலமாதங்கள் நடந்துவந்ததென்னக் கூறப்பட்டிருக்கின்றது.

சத்தி.—தமது மருமகன் என் பிதாவுக்கு நண்பன்; அதனால்
அவர் பக்ஷம் தாங்கி நின்றார். பரதேசம் குடியிருக்கப்
போவாருடன் மல்லுக்குப்போதல்! ஆ! சௌரியக்கொழுந்தே!
அன்னிய நாட்டில் இருவரும் போய்க்கைகலத்தலன்றே
பக்கத்தில் நின்று நான் பார்த்திடல் வேண்டும்: அப்போது புறங்
கொடுப்பாரைக்கண்டு நகைக்கலாம். உன் இயமானைவிட்டு
நீ வந்தேன் ?

விகட.—அவர் கட்டளையால்: அவர் வண்டியேறும்
வரைக்கு நான் கூடச்செல்ச்சகியார்; என்னைச் சேவகத்தில்
எடுக்கத்திருவுளமாகையில் நான் செய்யவேண்டுமுறை
வரைந்திக்குறிப்புகள் தந்து சென்றார்.

அரசி.— உனக்குண்மையுள்ள
அடிமையிவன்: அப்படியே இன்னும் இருப்பானெனவே
நம்புகின்றேன்.

விகட.— தேவரீரை அடிதொட்டு வந்திக்கின்றேன்.

அரசி.— வருக, சற்றே நடப்போம்

சத்தி.— ஒரு நாழிகையான பிற்பாடு
என்னுடன் பேச வருவாய்: என் நேயனை நீ வண்டியிற்
கண்டாகிலும் வரலாம்: இந்த வேளை நீ போய் வருவாய்
எல்லோரும் போக

———·———

பருவம். உ-வது-இதுவுமது-ஓர் வெளியிடம்.

## மகோதரனும், தினகரனும், சோமநாதனும் பிரவேசிக்க.

தினக.—தேவரீருடைய அங்கவஸ்திரமொன்றை மாற்றிவிடும்ப
டிகேட்டுக்கொள்வேன்; சண்டை செய்த மும்முரத்தால் சண்ணும்ப
றையில் வைத்தாற்போல் தேவரீரது தேகம் நீற்றலெடுக்கின்றது. காற்று
வரவிடும்; தேவரீரைச் சுற்றியடிக்கும் காற்றே காற்று.

மகோ.—என் அங்கவஸ்திரம் ரத்தம் தோய்ந்திருந்தால் அதையெடுக்க
வேண்டும். அவனை முறிபட அடித்தேனல்லவா ?

சோம.—(தனக்கு) அவன் சோம்பலைக் கூட முறிக்கவில்லை.

தினக.—முறிபடவா! முறிபட்டவன் நினைவேது? தேவரீர் வெட்டின வெட்டுக்கு அவன் கட்டையென்ன கல்லா, உருக்கா? அதினும் தேவரீரது காயத்துக்குமென்ன கணக்கா, வழக்கா?

சோம.—(தனக்கு) புலி விழுந்து தாக்கும்போது கழுதை யுதைக்கப் பார்த்தாலும் பார்க்கும். ஆகிலும், கழுதையுதைக் கஞ்சிப்பிடிவிடுமோபுலி?

மகோ.—அந்தக் கயவாளி என் முன்னே நிற்கமாட்டான்

சோம.—(தனக்கு) சும்மா நிற்கமாட்டான். உம்மை மொத்துவதற்கே அவன் கையெழும்.

தினக.—முன்னே நிற்கவா! தேவரீருக்கே வேண்டிய கரை காணிகளுண்டு. அதோடு தேவரீர் அவன் நின்ற பூமியையும் எடுத்தல்லோ விட்டீர். ஓ, சௌரியக்கொழுந்தே!

சோம.—(தனக்கு) மெய்யே, நீர் எத்தனைதரம் குப்புற விழுந்தீரோ அத்தனை பிடி ஈரமண் கவ்வி யெடுத்துவிட்டீர். அட, உலக்கைக் கொழுந்தே!

மகோ.—சிலர்மட்டும் எங்களிடையிலே வந்து தடுத்திராதிருந்தால், பார்த்திருக்கலாம்.

சோம.—(தனக்கு) நீர் எவ்வளவு நீளமுடையனென்று பூமிமேல் அளந்து காட்டல்.

மகோ.—அவளும் போய் இந்தப் பயலை விரும்பி என்னை நீக்கிவிட நினைத்தாளே!

சோம.—(தனக்கு) உத்தமனைச் சேர்வது பாவமாகில் (உரக்க) அவளுக்கு நரகந்தான் சுவாமி.

தினக.— தேவரீரிடம் பல முறை நான் தெரிவித்திருந்தபடி, அவள் அழகும் அறிவும் ஒரு வழிச் செல்லவில்லை. பார்வைக்குப் புகட்டுத்தான், ஆகில், அவள் உள்ளொளி விளங்கக் கண்டிருக்க மாட்டீர்.

சோம.—(தனக்கு) அவ்வொளி மூடர் மேற்பட்டுத் திரும்புதல் தனக்காகாதென்றே உம்மிடத்தில் ஒளிரவில்லை. மின்னொளிபோல் அது உம்மேற்பாய்ந்தால் நீர் இருக்கவும் மாட்டீர்.

அப்பொழுது அவர் கிடக்கும் கிடையில் அவரைப் பார்க்க உமது கண்கள் சகிக்கமாட்டா. சிறிது நேரத்தில் அவரது உடலுக்கு ஆடை அணி முதலியவற்றைப் புனைந்து விட்டு அங்கு போயிருப்பவர்கள் திரும்பிவந்து நம்மைத் தெரிவிப்பார்கள். அப்பொழுது நீரும் என்னுடன் அங்கு போய்ப்பார்க்கலாம். அது மட்டும் நீர் என்னுடைய அறையில் தங்கியிருக்க உடன்பட வேண்டும். உம்மை அவ்விடத்திற்கு அழைத்துச் செல்ல நான் கட்டளையிடுகிறேன். சிறிது நேரம் நான் இங்கிருந்து என் மனத்துயரை யாற்றிக்கொள்ள விரும்புகிறேன். நீரும் மிகக்களைப்புண் டிருக்கிறீர். சிறிது ஆறுதல் பெற்றிரும். உம்மை இந்நாட்டிற் கரசனாக முடிசூட்டுவிக்கும் படி எனக் குமது பெரிய தகப்பனார் கட்டளையிட்டிருப்பதால் நாளைக் காலையிலுமக்கு மகுடம் சூட்டவேண்டும்' எனக்காலவன் கூறினன்.

காலவன் விரும்பிய படி நடக்க இளவரசனுக்கு மன மில்லை; ஆயினும் சிறிது நேரம் அவனோடு மன்றாடியும் அவன் இடங்கொடாததைக் கண்டு இளவரசன் அங்ஙனஞ் செய்யச் சம்மதித்துத் தானோர் அறையிற் புகுந்து, தன் னுடை முதலியவற்றைக் களைந்து வையாமல், வழிவந்த கோலத்துடன் அங்கிருந்த ஓர் கட்டிலில் படுத்துக் சொண்டு செல்வ நாட்டில் நிகழும் புதுமைகளைக் குறித்து ஆலோசித்துக் கொண்டு கிடந்தான்.

தனித்து விடப்பட்ட காலவனும் இனிச் செய்ய வேண்டிய காரியமென்னவென்றாழ்ந் தாலோசிக்கலாயினன். தன்னுடைய சேனாநாயகனுக்குடன் ஆளனுப்பி வருத்தி அவனுடன் நெடு நேரம் உரையாடினான். தானெடுத்த காரியம் கைகூட வேண்டுமென்றால் அப்பொழுது அவன் மனந்துணிந்து எதையுஞ் செய்யத்தலைப்பட வேண்டிய தின்றியமையாத தாயிற்று. எடுத்த கடை முடிக்க என்ன செய்ய வேண்டுமானாலும் செய்யக் காலவன் துணிவுடையன் என்பது திண்ணம்.

என்ன துணிவு பாருங்கள்! உறங்கிக்கிடந்த இளவரசன் விடிய ஒரு யாம மிருக்கையில் யாரோ ஒருவன் தன்விடது தோளில் வன்பிடியாய்ப் பிடித்தசைத்ததை யுணர்ந்து கண்விழித்துப் பார்க்கையில் அங்குத் தன் கட்டிலைச் சுற்றி ஆறு படைவீரர்கள் படையேந்தி யகையினராய் நிற்கக் கண்டான். அவன் கையிலிருந்த வாளும் அவர்களால் அபகரிக்கப்பட்டுப் போயிற்று. ஆகலால் அவன் நிராயுதனாயும் அக்கொடியர் கொடுமைக்குத் தப்ப வழியற்றவனாயு மிருப்பதையுந் தெரிந்தான். "நீங்கள் யார்? இங்கிவ்விரவில் ஆயுதபாணிகளாய் வந்தென்னைப்

பிடித்தசைத் துணர்த்தக்காரண மென்ன? இத்துணிவுக்களுக் குண்டாகக் காரணமென்ன? விரைவிற் சொல்லுங்கள்" என்று சினந்து கேட்க, அதற்கு மறுமொழி யொன்றுஞ் சொல்லாமல் "அரசன் உம்மோடு ஏதோ சில வார்த்தைகள் ஆடவிரும்புகிறார்" என்று அவரிலொருவன் கூறினான். "யார்? அரசனா! அரசனோ இறந்தனனே! அங்ஙனமாக அவன் எங்ஙனமெனக்குக் கட்டளை யிடல் கூடும்? விரைவிற் பகர்தி என்றான். இளவரசன்,

"இப்பொழுது செல்வநாட்டையாளும் புதிய அரசனை நீர் அறியீர் போலும்! அவரேயிக் கட்டளையிட்டவர்" என்றான் வேறொருவன்,

"அரசனிறந்த விசாரத்தால் காவலன் பித்தனாயினன் போலும். இப்பித்தன் கட்டளையை யான்சாரமானதாகக் கொண்டு நடக்கத்துணியேன். நீங்கள் போகலாம்" என்றான். இச்சொல்லை அவர் சிறிதும் மதித்திலர். அவர் ஒன்று கூடி இளவரசனை இறுகக் கட்டி யிழுத்துச் சென்று காலவன் முன்னிறுத்தினர். காலவன் தானிருந்த இடத்தை விட்டெழுந்திருக்கும் வழக்கத்தைத் தவிர்த்து இருந்தழி அவனை நோக்கி யோர் புன்னகையாடி யிங்ஙனம் கூறுவான்.

"நீ நல்ல சமயத்தில் வந்திலை என்று முன்னரே யான் கூறினனன்றோ! இன்றரசனிறந்து பட்டான். இந்நாடின்று முதலெனதாயிற்று. தேச யாத்திரையிற் சென்றிருந்த நீ வரவேண்டிய காலத்தில் வந்திலை. அரசச்செல்வி என்னுழி வலிய வந்தனள். அவளை யானுதரியாதுவைவிடுதல் தகாது. அங்ஙனம் யான் செய்வேனாகில் என்னின் அறிவிலார் உலகிலுளராவரோ கூறுதி. நீயோ இன்னும் மீசை முளையாத ஓர் சிறுவன். உனக்குமக் குற்றேவல் செய்து காலங்கழிக்கவன்று என்னாசான் எனக்குக் கற்பித்த தென்றறிக".

"செல்வ நாட்டிற் கோரசனேயுளன். இறந்த மன்னவன் ஆணைப்படி அவ்வரசன் உக்கிர சேனனேயாகின்றான். அவ்வாணையைத் தலைமேற் கொண்டு நடத்துதற்கே யானிங்கு வந்திருக்கின்றேன். என்னுரிமையை எனக்குத் தருவாயாக. இதற் கேதேனும் தடை கூறுவாயாகில் உன்னுடன் போராடியேனும் யானென் னுரிமையைக் கைக்கொள்ளா தொழியேன். ஆதலால் நன்றாயோசித்துப் பேசுக என்று மிகச்சினந்து இளவரசன் கூறினான்.

"மதிகெட்டவனே இனி உன்னால் இக்காரியம் சாதிக்கப்படாது. சற்

று முன் வந்திருப்பையாகில் நீ யரசனுக்கப்பட்டிருப்பாய். அக்காலம் இப்பொழுது தவறிப்போயிற்று. இன்னுமிரண்டு நாழிகைப் பொழுதில் வள்ளுவர்கள் நாடெங்கும் பறை சாற்றி 'இன்றுமுதல் காவலனே நமக்கரசன்' என்று தெரிவித்து விடுவார்கள். எவரேனும் அதற்குடன் படாது தடைகூறுவராகில் அவர்களை யமபுரமனுப்புவன்" என்று சொல்லி விட்டுத்தானிருந்த இருக்கை விட்டுக் கொதித்தெழுந்து நின்று கொண்டு உக்கிர சேனனை நோக்கி "அடேபதரே! நீயிங்கு வந்திருக்குஞ் செய்தி இங்கொருவருக்கும் தெரியாது. நீ போவது மொருவருமறியார். இன்னுஞ் சிறிது பொழுதிலுன்னைத் தக்க காவலிற் படுத்தி நாட்டிற்கு வெளியே கொண்டுய்க்கச் செய்வேன். இன்னுஞ் சிறிது நேரத்திலுன்னை நமனுலகஞ் சேர்ப்பேன். பின்னர் என்னை யன்றி இந்நாட்டிற்கு அரசனாதற்கியாருளர்? நீ சிறிதேனும் புத்தியுள்ளவனா யிருந்தால் துணைவலியின்றி இந்நாட்டிற்குள் இப்பொழுது புகுந்திருக்க மாட்டாய். உன் புத்திக்கேதோ சிறிது கோட்டம் நேரிட்டிருக்கிறதென்று தோன்றுகிறது. இப்பொழுது போகும் பொழுது தக்க காவலாளிகளாற் சூழப்பட்டவனாகவே யிருப்பாய். உன்னுடன் யான் ஆறுபோர் வீரர்களை யனுப்புவேன். அவர்கள் உன்னைப் புறநகரிற் கொண்டுபோய் அங்கு குறிக்கப்பட்டிருக்கு மிடத்தில் உன்னைக் கொன்று உன்னுடலையுந் தலையையும் வேறாக்கி இரண்டையும் காட்டில் வெவ்வேறிடங்களி லெறிந்து விட்டு வருவார்கள். உன்னுடலையேனுந் தலையை யேனும் பின்னர்க் காண்போர் உன்னை இன்னானென்றறியார். பணத்திற் காசைப்பட்டு ஆறலைக்கும் கள்வரால் கொலையுண்ட ஓர் வழிப்போக்கனாகவே உன்னையும் பின் காண்போர் பதிக்கப் போகின்றனர்" என்றான்.

"இங்ஙனம் செய்ய நீ ஒருநாளுந் துணிவு கொள்ளாய். நாட்டார் இதனை யறிந்தால் யாவருந் திரண்டு உன்னை எரியிலிட்டு யிருடன் கொளுத்தி விடுவார்கள்" என்றான் உக்கிரசேனன்.

"ஏனடா வீணிற் பிதற்றுகிறாய். இளங்கன்று பயமறியாதடா. நீ வந்ததும் தெரியாது போவதுமறியார்கள். இந்த விஷயத்தில் யானும் எதையுஞ் செய்யச் சித்தந் துணிந்திருக்கிறேன். நீ நான் துணியேன் என்றாய். அஃது மிகத்தவறான மொழி. உன் அன்னையாகிய அரசனைக் கொன்ற திக்கையே என்றறி. அவளிரத்தப் பெருக்கு நோயாலிறந்தாளென்று யானுலகத்தாரைத் தெரிவிக்கப் போகிறேன். இத்தனையுஞ் செய்யத் துணிவுகொண்ட என்மனம் உன்னுயிரை மாய்க்கத்

துணியாதென்றது என்ன பேதைமை!" என்றனன் காலவன்.

இச்சொல்லைக் கேட்கவே இளவரசன் கோபாவேசம் பூண்டு காலவன் மீது பாய, அவனைச்சுற்றிநின்றபடைவீரர்கள், அவனை யிறுகப் புல்லிப் பிடித்துக்கொண்டார்கள். அவர்களைத் திமிறிக்கொண்டு போகத் தன்னாலியன்றமட்டும் முயன்றும் பலிக்கவில்லை.

பின்னும் காலவன் சற்றும் மனஞ்சலியாமலும் நாக்கூசாமலும் அடங்கிய மொழிகளாற் பின்வருங் கர்ணகடோரமான செய்தியு முரைத்தான். "நீ திரும்பி யிந்நாட்டிற்கு வந்தது அரசு பெறுதற்கன்று. உன்மனதிருப்பு எனக்கன்றோ நன்குதெரியும். நீ யிளைஞனாயிருக்கையிலேயே பெருங்காமியென்பதைத் தெரிவித்திருக்கிறாய். இன்றேல் உன் பெரியதகப்பனார் பெற்றெடுத்த செல்வி மீது நீ பெரு நேசங்கொண்டு அவளுடன் கூடக்களித்தும் அவள் போமிடமெல்லாம் போயும் அவள் கேட்டவற்றை யெல்லாமவளுக்குச் சாதித்துக் கொடுத்தும் அவளுடைய வனப்பையும், கல்வியையும், புத்திசாதுரியத்தையுங் கண்டு வியந்தும் காலங்கழித்திருப்பையா? கல்வி கற்கவென்றுன்னை வெளிநாட்டிற்குன் பெரிய தகப்பனார் அனுப்பிய காலத்தில் அவளிடஞ் சென்று ஏகாந்தத்திலுரை பலவாடி அவளைச் சமாதானப் படுத்தி உன்னுடைய ஞாபகமவள்மனத்தை விட்டு நீங்காதிருக்க நினைத்து அவள் கையினுன் ஆழியைக் கொடுத்து விட்டுப் போவையா? துர்ப்புத்திகளுக்கெல்லா மிருப்பிடம் நீ யன்றோ! அவளை மணம்புரிந்துகொள்ள இச்சைப்பட்டே நீ யிப்பொழுதிங்குப் போந்தது. அதற்கு நானிடங்கொடேன். அவள் செல்வ நாட்டிற்கரசியாய் என்னுடனிருந்தர சாளப்போகிறாள். அவளை நானே மணம்புரிவேன். வெகுநாளாய் அவள் என்மீது ஆசைகாட்டியிருக்கிறாள். யானு மவள்மீது அன்புடையேன். தகப்பனிறந்து கிடக்குமின்றும் அவள் என் மீது காதல் கொண்டிருக்கிறாள். தகப்பனிறந்ததைக் கேட்டவுடன் அவள் என்னிடம் ஓடிவந்து "என்னை நீரே மணம்புரிந்து கொள்ளவேண்டும். இதுகாறும் என் தந்தையைப் பயந்தே இச்செய்தியைத் தம்மிடம் வெளியிட்டிலன். அத்தடையுமின்று நீங்கிற்று. இனி எனக்கு நீரே காப்பு" என்று கூறி இம்மோதிரத்தையு மென விரலி லிட்டனள் காண்" என்றான்.

இம்மொழி செவியிற் புகுதலும் உக்கிரசேனன் கோபாவேசங்கொண்டவனாய்க் காலவனை நோக்கி "ஏ பாதகா! என்ன வார்த்தை சொன்னாயடா? ஏ குலாந்தகா! நினது நாவை இன்றே துண்டித்து விடவேண்டாமோ! உன் மகளை நீ விவாகஞ்செய்து கொள்வதிற்சிறந்ததாம் என்றறி.

# சைவ சித்தாந்த சாரம்.

கடல் புடை சூழ்ந்த இவ்வுலகத்தையாம் கவனித்துப் பார்க்கும்போது, அது ஒரு உள்பொருளேயன்றி வேறின்றென நன்கு விளங்கும். ஏனெனில் இல்பொருளுக்குத் தோற்றம் ஒன்றுமின்மையால்; அது (உலகம்) அவன் அவள் அது வெனும் அவயவப் பகுப்பினையுடையதா யிருக்கின்றது. இம்மூவகைப் பகுப்பும் அறிவுடைப் பொருள் அறிவிலாப்பொருளென்னும் இரண்டு வகுப்பினுள்ளடங்கும்.

இவ்விரு வகுப்பினுள்ளடங்குவனவாகிய பொருள்கள் தோன்றி, நின்று, நிலைமாறுந்த ஒதியுடையன. இங்ஙனம் முத்தொழிற்படுமாற்றால் அவைகள் இயற்கைப் பொருள்களல்லவென்று துணியப்படும். ஏனெனில் இயற்கைப் பொருள்கள் தங்கள் சுபாவநிலையில் நின்று மாறுதலடையாது என்றும் ஒரு பெற்றித்தா யிருக்குமவைகளாம்.

இங்ஙனமின்றி மேற்கூறியாங்கு விகாரமுறுமாறு செய்து இயக்குவித்தற்கு ஒரு வினைமுதல் வேண்டும். அவ்வினைமுதலும் அப்பொருள்களைப் போல் விகாரமின்றிப் பேரறிவுடையனா யிருத்தல் வேண்டும்.

மேற்கூறிப் போந்தவாற்றால், அறிவுடையுலகு, அறிவிலாவுலகு, இவ்விரண்டையுஞ் சம்மந்த முறுவித்தற்கோர் வினைமுதல், ஆக முப்பொருள்களுள எனவென்பது பெற்றாம். அவைகளை ஆன்மா, உலகம், கடவுள் எனப் பெரியோர் கூறுவர். இம்முப் பொருள்களும் அநாதி நித்தியமா யுள்ளவைகள். எவ்வணமெனிற் கூறுதும். அறிவுடையுலகு அல்லது ஆன்மா அநாதி நித்தியமின்றி சிருட்டிக்கப்பட்டதென்று கொள்ளில் எதினின்றுஞ் சிருட்டிக்கப்பட்டதென்று ஒருவினா நிகழும். அப்பொழுது பேரறிவுடையோனாகிய கடவுளினின்றோ அல்லது அறிவிலாவுலகினின்றோ என்னும் ஐயம் நிகழும். ஏனெனில் இவைகளையன்றி வேறுயாதானும் ஒரு பொருள் இன்மையால்.

ஒரு பொருள் காரியப்படும்போது அது மூவகைக் காரணங்களைப் பொருந்தி நிற்றல் வேண்டும். அவையாவன முதல், துணை, நிமித்தம் என்பவைகளே.

இவற்றுள் முதற்காரணம் செயப்படுபொருளோடு ஒற்றுமையுடையது; மண்ணும் கடமும்போல.

துணைக்காரணம் செயப்படுபொருள் ஆங்காறும் உடன் நின்று நிகழ்வது; தண்டசக்கரம்போல.

நிமித்தகாரணம் துணைக்காரணத்தைக் கருவியாய்க்கொண்டு முதற்கார

த்தினின்றும் ஓர் செயப்படு பொருளை இயற்றுவோன் குயவனைப்போல.

ஆகவே ஒரு குடத்திற்கு மண்முதற்காரணம், தண்டசக்கரம் துணைக்காரணம். குயவன் நிமித்தகாரணம்.

இம்மூவகைக்காரணங்களின்றிசெயப்படு பொருளொன்று பெறுதல் கூடாது.

இந்த நியாயத்தால் கடவுளினின்றும் ஆன்மா சிருஷ்டிக்கப்பட்டதென்றால், அது முதற்காரணமாகிய கடவுளுடன் ஒற்றுமையுடையதா யிருத்தல் வேண்டும். அவ்வன்பின்றிச் சிற்றறிவும் சிறுதொழிலும் பொருந்தாநிற்றலை யாம் அநுபவத்திற்கண்டாம். ஆதலால், பேரறி வுடையோனாகிய அவனினின்றும் அது வந்ததல்லவெனப் பெற்றும்.

அன்றியும் சிற்றறிவுடைய இவ்வான்மா அறிவென்பது சிறிதுமில்லாத சடப்பொருளினின்று வந்ததென கூறுதற்கு யாதொரு இயைபுமின்றாம். ஆதலால் இது (ஆன்மா) ஒரு பொருளினின்றுந் தோற்றுவிக்கப்படாத நித்தியப் பொருளாம்.

கடவுள் வேறொரு பொருளினின்றுந் தோன்றியவரும் அன்று. ஏனெனில் அவரைப்போல் வேறொரு பொருளின்மையால் என்க. அவர் தோற்றுவிக்கப் பட்டவருமன்று. ஏனெனில் அவரினும் வேறொரு முதலின்மையால் என்க. அவரினும் வேறொரு முதல் உளனெனக் கூறில், அம்முதலுக்கு மற்றொரு முதலை நாடவேண்டும். மற்றொரு முதலுக்கு வேறொரு முதலை நாடவ் வேண்டும்.

அவ்வாறு போகப்போக வரம் பின்றியோடும். அங்ஙனம் காரணத்திற்குக் காரணமும் அக்காரணத்திற்கு மற்றொரு காரணமும் கருதிச்செல்லுதல் தருக்க நூலார் மதமன்று. ஆதலால் அக்கடவுளும் அநாதி நித்தியர்.

ஆன்மாவும் கடவுளும் அநாதி நித்தியப் பொருள்களாகவே ஆன்மாபொருந்தி இன்பதுன்ப மநுபவித்தற்கு நிலைக் களமாயுள்ளதுங் கடவுளது சக்தியால் செயப்படுபொருளுமாய்ப் போந்ததுமாகிய இவ்வுலகமும் அநாதிநித்தியமாம். ஏனெனில், அவனது கிருத்தியங்களெல்லாம் அவன் உள்ள அன்றே யுளவாதலால் அதற்கு இலக்காகிய இவ்வுலகமும் அநாதிநித்தியமே.

இதுகாறுங் கூறியவாற்றால் மேற்கூறிய முப்பொருளும் அநாதி நித்தியப் பொருள்களெனவறிந்தாம். இவைகளைத்தான் சைவ சாத்திரம் * பதி, பசு, பாச மெனக்கூறும்.

பதியென்னும் வார்த்தை ஆன்மநாயகன் என்று பொருடரும்.

* இவற்றிற்கு நேரிய தமிழ்ச்சொல் இறை, உயிர், வினை.

## சமாசாரக் குறிப்புகள்

சென்னை மாகாணக் கூட்டம் இவ்வருஷம் பத்தாவதாக மே ௴ ௨௰௨ மதுரையிற் கூடிற்று. டெலிகேற்றுகளாக ௩௱ கனவான்கள் பிரசன்னமாயிருந்தார்கள். இன்னும் அக்கூட்டத்தின் நடபடிகளைக் கண்ணுற்றுக் களிப்புற ஏகதேசம் ௨௱ பெரியோர் வந்திருந்தனர். ஒரு இந்திய மாதும் அக்கூட்டத்தில் காணப்பட்டனள். இது நம்மவர்க்கோர் பெருமையே. சில மலையாள தேசத்தாரும் அங்கு சென்றிருந்தார்கள். பாலவனத்தம் ஜமீன்தார் கனம். பாண்டி துரைசாமித் தேவரவர்கள் இக்கூட்டத்தாரை நல் வரவு கூறி உபசரித்தனர். ஆனறபிள் அனந்தா சார்லு அவர்கள் இக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கப் பெற்றனர். இவர் வெகு சாதுரியமாய் கேட்பவர் மனசைக் கவரத்தக்கதாகப் பேசினர். இக்கூட்டில் செய்யப்பட்ட விசேஷித்த தீர்மானங்களாவன :—

௧. பிரதி வருஷமும் ஒவ்வொரு ஜில்லாவின் கலக்டரும் ஆங்காங்கு ஒரு பொதுக் கூட்டங் கூட்டி தாமே தலைமை வகித்து அதில் நடந்த மேலான தீர்மானங்களை கவர்ண்மென்டாருக்குத் தெரிவித்தல்.

௨. மலபாரில் நிலவரிகளை அடிக்கடி போக்கு வரவு செய்து கூட்டுதல் அநீதியாகையால் சாஸ்வதமான தீர்வையையே ஏற்படுத்தல்.

௩. கிருஷி அபிவிர்த்திக்காக கடன் கேட்கும் மநுக்களை கால தாமதமின்றி முடிவு செய்வதற்கு தனியே ஒரு உத்தியோகஸ்தரை நியமிக்கவேண்டுமென்றும், அக்கடனை வசூலிக்கும் விஷயத்தில தற்காலம் ஏற்பட்டிருக்கும் சட்ட திட்டங்களை இலகுவாக்கவேண்டுமென்றும், கிணறுகள் வெட்டுதற்குக் கடன் கேட்டால் கவர்ண்மெண்டார் சிலவிலேயே வெட்டுதற்குரிய இடத்தைத்தாங்களே தெரிந்தெடுத்துக் கொடுக்கவேண்டுமென்றும்.

௪. தேவஸ்தான விஷயமாய் கம்மிட்டி மெம்பர்களை ஐந்து வ

ருஷத்திற்கொருமுறை புதிதுபுதிதாய் நியமிக்க வேண்டுமென்றும், தர்மகர்த்தர்க்களை நீக்கும்படியான சுவாதந்தரியம் கம்மிட்டியாருக் கிருக்கவேண்டுமென்றும், ஒவ்வொரு வருஷத்துக் கணக்குகளையும் அச்சிட்டுப் பகிரங்கமாய் வெளிப்படுத்த வேண்டுமென்றும், அதனைச்சரி பார்ப்பதற்கு பொதுவாக ஆடிட்டர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்றும், இவை போன்றன சிலவும்.

௫. பாரஸ்டு டிப்பாட்டுமென்றில் ௲௮௱௬௰௭ ௵ த்து ௫ா௬௰௯-து உத்தரவின்படி இப்பொழுது நடைபெறவில்லையென்றும் அதுவிஷயமாகப் பிரஜைகளுக்குச் சுதந்திரங்கள் அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்றும், இவ்வாறு மூன்று நாள் இக்கூட்டம் நடந்து கலைந்தது.

❁❁❁

விவாகமில்லாப் பெண்கள்.— மத்திய ஆசியாவில் ஒரு ஜாதியார்களில் விவாகமில்லாத பெண்கள் நாவில் துளை செய்து மோதிரங்களை யணிகிறார்கள். இதென்ன தேசாசாரம்? இதுவும் நாகரிகமோ இது பெண்களுக்கு நாவடக்கம் வேண்டுமென்று செய்யப்படுகிற தண்டனை போலும்.

❁❁❁

சென்ற மேமீ 24-வ சக்கிரவர்த்தினி கௌரவ நாளாக கொண்டாடப்பட்டது. தன்றி சக்ரவர்த்தி திருநாள் அன்று.

❁❁❁

“ நாஞ்சிநேசன் ” இத்தமிழ்ப் பத்திரிகை நன்செய்நாட்டில் தோன்றி மலைநாட்டிலுள்ள தமிழ் மாந்தர்கட்கு இகபர உறுதி சூழ்ந்து உலாவிச் சிறந்து விளங்கிற்று. அது தான் றோன்றிய இரண்டாவது வருடத்தில் தானே நின்று விட்டதென்பதை யறிந்து விசனிக்கின்றோம். பத்திரிகை தோன்றுதல் பத்திரிகாசிரியர் முயற்சியென்பதும் அதனை வளம்பெற நிலைநிறுத்துதல் பத்திரிகாபிமானிகள் கடனென்பதும் நம்மவர் நன்கறிவர். இந்நன் செய்நாட்டார் யாவரும் தமிழ் மாந்தரே. எனினும் அவர் தமிழ்மீது செலுத்தும் அன்பின்றிறத்தை இச்செயல் நன்கு விளக்குகின்ற தல்லவா? இஃது இவர் தம்பெருமைக்கிழுக்கன்றோ! நிற்க. பத்திரிகாசிரியரையும் குறை கூறுகிரு

கக விடமில்லாதிருத்தல பற்றி யார்தான் துன்புறுர்கள்.

⊙⊙⊙

உலோக உற்பத்தி.—நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் பொன்னும் வெள்ளியும், ஈயமும், நாகமும், தாமிரமும், உற்பத்தியாகின்றன. இவற்றுடன் கரியும் உற்பத்தியாகின்றது இந்த உலோகங்களின் உற்பத்தியின் விலை. 1900-ம் ஆண்டு வரையில் 14-கோடியே 6-லட்சத்து 85-ஆயிரத்து 532-பவுண்டு எனக் கணக்கிடப் பட்டிருக்கிறது இது வல்லவோ நாடு.

⊙⊙⊙

சக்கரவர்த்தி ஜனனநாள்.—நமது மாட்சிமையுடைய ஏழாவது எட்வர்டு மன்னர் அவர்கள் ஜனனத்திருநாள் நவம்பர் மாதத்திற் கொண்டாடப் படுவது மாற்றி மகாராணி விக்டோரியா அவர்கள் ஜனனநாளாகிய மேமீ 24-உயில் இனிக் கொண்டாடும் படியாக மன்னர் உத்தரவு செய்திருப்பதாகச் சில பத்திரிகைகள் கூறுகின்றன. சில பத்திரிகைகள் நவம்பர் மீ-த்திலேதான் அரசர்கோமான் ஜனனத் திருநாளின் வைபவம் கொண்டாடப்படுமென்று சொல்கின்றன.

⊙⊙⊙

குரங்கு கொடியது.—பம்பாயில் ஹரிச்சண்டு முந்சீராம் என்பவன் ஒரு குரங்கை வளர்த்தான். அந்தக் குரங்கு கட்டிலிருந்து விடுபட்டு பக்கத்து வீட்டுக்குப்போய்; அந்த வீட்டுக்குள் தொட்டிலிற் படுத்திருந்த 18 மீ'க குழந்தயை எடுக்கத் தொடங்கியது. குழந்தையை வெளிப்படுத்த முடியாமையால் முன்கையைப்பற்றிக் காயமுண்டாகக்கடித்துவிட்டு ஓடிப்போயிற்று. குழந்தை வகையயாற்றத தக்க சிகிச்சை செய்யப்படுகிறது. குற்றமற்றதும் தன்னைக்கோபமூட்டாததுமான குழந்தையைக் கடித்த குரங்கைத் தண்டிப்பவர்யார்? குரங்கைத் தண்டிக்கலாகாது' குரங்கை வளர்த்தவன்தானே தண்டனைக்குள்ளாகத்தக்கவன்! குரங்கை வளர்ப்பது யென்ன சிலாக்கியமோ? நாயைவளர்ப்பது நல்லது. அது சமயத்திற்காக்கும்: வீட்டுக்கும் அது நல்லகாவல்.

ஸ்ரீமான் R. சந்திரபாநு ராவ் அவர்கள்,
Irrigation Supervisor, நாகர்கோயில்.

,, G. வெங்கடசுப்பிரமணிய அய்யர் அவர்கள், B. A.,
தாசில்தார், தோவாளை, பூதப்பாண்டி.

,, S. T. பொன்னம்பலநாத முதலியார் அவர்கள்,
வக்கீல், ஸ்ரீவைகுண்டம்.

,, வ. க. ஆ. வேயின்றமுத்துப் பிள்ளை அவர்கள், அரத்தக்குடி.

,, S. K. சுப்பையாப் பிள்ளை அவர்கள்,
Honorary Magistrate, அரத்தக்குடி.

,, V. R. கஸ்தூரிரங்க அப்பாசாமி நாயகர் அவர்கள்,
ஜமீந்தார் முதற்பாகம், இளவரசனேந்தல்.

,, ஜமீந்தார் அவர்கள், குருவிகுளம்.

## போஷகர் வரவு.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| ஷை. | S. T. பொன்னம்பலநாத முதலியார் அவர்கள் ... | 5 | 0 | 0 |
| ,, | வ. க. ஆ. வேயின்றமுத்துப் பிள்ளை அவர்கள் ... | 5 | 0 | 0 |

☞ இடமின்மையால் சந்தா வரவு அடுத்த முறை வைக்கப்படும்.

## அறிவித்தல்.

அறிவு விளக்கம் சந்தா விவரம்.

உள்ளூர் வெளியூருக்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 2.
பிரதி ஒன்றுக்கு விலை அணா 4. போஸ்டேஜ் பிரத்தியேகம்.
பழைய பிரதி ஒன்றுக்கு விலை அணா 6.

ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும், 10-உ வெளிப்படும். இனிச் சேரும் நமது சந்தாதார்களுக்கு அவர் சேரும்மாதம் முதலுள்ள பத்திரிகைகளை அனுப்பிவரப்படும். ஒருவருடத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப் படமாட்டாது.—ப-ர்.